# சிறுவர் உரிமைகள் பற்றிய அறிமுகம்

## சிறுவர் உரிமைகளின் பாதுகாப்பு
## மற்றும் மேம்பாடு
## தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்

கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவு
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# சிறுவர் உரிமைகள் பற்றிய அறிமுகம்

சிறுவர் உரிமைகளின் பாதுகாப்பு
மற்றும் மேம்பாடு
தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்

கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவு
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| சிறுவர் உரிமைகள் | 01 |
| சிறுவர் தொடர்பான சட்டங்களும் சட்டவாக்கங்களும் | 02 |
| சிறுவர் உரிமைகள் - தேசிய சட்டவாக்கம் | 09 |
| சிறுவர்களுக்கு எதிராக புரியப்படுகின்ற குற்றச்செயல்கள் | 12 |
| சிறுவர் துஷ்பிரயோகம் | 13 |
| சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் அறிவிக்க வேண்டிய இடங்களும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் | 19 |
| இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பற்றிய அறிமுகம் | 24 |

# சிறுவர் உரிமைகள்

உடலியல் மற்றும் உளவியல் முதிர்ச்சியற்றதன்மை காரணமாக சிறுவருக்கு அவரின் பிறப்புக்கு முன்னரும் பிறப்புக்கு பின்னரும் தகுந்த சட்டப் பாதுகாப்பு உள்ளடங்கலாக விசேட பாதுகாப்பும் கவனிப்பும் அவசியமாகும்.

(1959ஆம் ஆண்டு நவம்பர் 20 இன் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தீர்மானம் 1386(XIV) இன் கீழாக சிறுவர் உரிமைகளுக்கான பிரகடனம் அதிகார பூர்வமாக வெளியிடப்பட்டது)

பதினெட்டு வயதுக்குட்பட்ட ஒவ்வொரு நபரும் "சிறுவரொருவர்" என வரையறுக்கப் படுகின்றது.

சிறுவர் என்ற சொல்லை பல்வேறு சட்டங்கள் வேறுபட்ட வழிகளில் வரையறுக்கின்றன.

- பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆனொருவர் வயது வந்தவரொருவராக கருதப்படுகின்றார்.
  **- 1895ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வயது முதிர்ச்சிக் கட்டளைச் சட்டம்**
- 14 வயதுக்குட்பட்ட நபரொருவர் சிறுவராகவும் 14-16 வயதுக்குட்பட்ட எந்த நபரும் இளைஞராகவும் கருதப்படுகின்றார்.
  **- சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டம், கடை காரியாலய கட்டளைச்சட்டம்**
- 14 வருடங்களுக்கு குறைந்த வயதையுடைய நபரொருவர் சிறுவராகவும், 14 வருடங்களுக்கு மேற்பட்ட ஆனால் 18 வருடங்களுக்குட்பட்ட வயதையுடையர் இளம் ஆளொருவராவார்.
  **- பெண்களையும் இளம் ஆட்களையும் சிறுவர்களையும் தொழிலுக் கமர்த்தல் சட்டம்**
- 16 வருடங்களுக்கு குறைந்த வயதையுடைய பெண்ணொருவர் யுவதியொருத்தியாவார்.
  **- அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டம்**
- 5 வருடங்களுக்கு குறைவான வயதையுடைய குழந்தை எவரும் ஒரு சிறுபராயத்தவராவார். 5 வருடங்களுக்கு மேற்பட்டவரும் ஆனால் 14 வருடங்களுக்கு குறைவான வயதையுடைய எந்தவொரு நபரும் சிறுவரொருவராவார்.
  **- கல்வி கட்டளைச்சட்டம்**

- ஜனாதிபதிக்கான பாராளுமன்ற உறுப்பினருக்கான தேர்தலொன்றில் வேட்பாளராக அல்லது தேருனராகவிருப்பதற்கு அல்லது ஏதேனும் மக்கள் தீர்ப்பில் வாக்களிப்பதற்கு பதினெட்டு வயதையடையாத எவரும் தகைமையுடையவராதல் ஆகாது.
  - **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரை 89 (ஆ).**

## சிறுவர் தொடர்பான இலங்கையின் சட்டங்களை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

- சிறுவர் தொழில் தொடர்பான சட்டங்கள். *உ-ம்: கடை காரியாலய கட்டளைச்சட்டம்*
- குற்றவாளிச் சிறுவர் தொடர்பான சட்டங்கள். *உ-ம்: தண்டனைச் சட்டக்கோவை*
- குடும்பச் சட்டத்தின் கீழான சிறுவர் தொடர்பான சட்டங்கள்.
- குடியியல் மற்றும் குற்றவியல் நடபடிமுறை தொடர்பான சட்டங்களும் ஒழுங்கு விதிகளும். *உ-ம்: குடியியல் நடபடிமுறைக்கோவை*

# சிறுவர் தொடர்பான சட்டங்களும் சட்டவாக்கங்களும்

## 1998ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம்

சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் பாதுகாக்கும் தேசிய கொள்கையொன்றை ஒழுங்கமைக்கும் நோக்கத்துக்காகவும் அத்தகைய துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களினை அனுசரித்தல், எல்லா வகையான சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளையும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கான ஒருங்கிணைப்புக்கும் கண்காணிப்புக்குமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையைத் தாபிப்பதற்கானதொரு சட்டம். இச்சட்டம் அதன் உறுப்பினர்களுக்கு அதிகாரங்களையும் கடமைகளையும், உத்தியோகத்தர்களின் குழு, அதிகாரசபையின் கூட்டங்கள், சிறுவர் தொடர்பான கொள்கைகளின் அமுலாக்கமும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரசபையின் அதிகாரம் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளையும் கொண்டுள்ளது.

## 1939ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளம்ஆட்கள் கட்டளைச்சட்டம்

இளந்தவறாளிகளை மேற்பார்வை செய்வதற்கும், சிறுவர்களையும் இளம் ஆட்களையும் பாதுகாப்பதற்கும் அதனுடன் தொடர்பான ஏனைய நோக்கங்களுக்காகவும் இளந்தவறாளி நீதிமன்றத்தைத் தாபிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கானதொரு சட்டம். இச்சட்டம் இளந்தவறாளி நீதிமன்றத்தின் நடபடிமுறைகள் மற்றும் சிறுவர் குற்றவாளிகளோடு தொடர்புபட்ட நீதிமன்றங்களின் செயல் வழிகளுக்கான அடிப்படை கோட்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

## 1927ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஆபாச வெளியீடுகள் கட்டளைச்சட்டம்

சிறுவர்களதும் இளம் ஆட்களதும் நலன்களைப் பாதிக்கும் ஆபாச வெளியீடுகளை தடுக்கின்றதானதொரு சட்டம். எவ்வெளியீடுகளுக்கு இச்சட்டம் பொருத்தமானது, ஒரு வெளியீடு எப்போது குற்றவியல் தவறொன்றாக மாறும் மற்றும் அத்தகைய வெளியீடுகளை இறக்குமதி செய்வதனைத் தடை செய்வதுமான ஏற்பாடுகளை இது உள்ளடக்கியுள்ளது.

## 1944ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க குற்றவாளிகளின் நன்னடத்தைக் கட்டளைச்சட்டம்

குற்றவாளிகள் நன்னடத்தையின் மீது விடுதலை செய்யப்படுதல், அத்தகைய குற்றவாளிகளின் மேற்பார்வை செய்தல் மற்றும் நன்னடத்தைச் சேவையைத் தாபித்தல் நிருவகித்தல் தொடர்பானதொரு சட்டம். நன்னடத்தை கட்டளையிடப்பட்டிருத்தல், நன்னடத்தை நிபந்தனை, நன்னடத்தையின் மீது விடுதலை செய்தல், பிணை, கண்காணிப்பு மற்றும் நன்னடத்தை ஆணையாளர் ஆகிய சூழ்நிலைகளை இக்கட்டளைச்சட்டம் உள்ளடக்குகின்றது.

## 1939ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க இளங் குற்றவாளிகள் (பயிற்சிப்பாடசாலைகள்) கட்டளைச்சட்டம்

இளந்தவறாளிகளைத் தடுத்து வைத்தல் குறிக்கோள்களினை ஏற்பாடு செய்கின்றவொரு கட்டளைச் சட்டமாகும். பயிற்சிப் பாடசாலைகளின் நிருவண முகாமைத்துவத்துக்கும் குற்றவாளிகளுக்கான பயிற்சியைக் கட்டாயமாக்கின்றதான நிபந்தனைகள் மற்றும் குற்றவாளிகளை மேற்பார்வை செய்தலும் இடமாற்றலுக்குமான ஏற்பாடுகளை இது கொண்டுள்ளது.

## 1841ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க அலைந்து திரிபவர்கள் கட்டளைச்சட்டம்

அலைந்து திரிதல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை இச்சட்டம் ஏற்பாடு செய்கின்றது. அலைந்து திரிதல் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருத்தல், நடத்தை, தண்டங்கள், அலைந்து திரிபவர்கள் தொடர்பில் நீதவானின் அதிகாரங்கள் மற்றும் பிணை ஆகிய சூழ்நிலைகளை இக்கட்டளைச்சட்டம் உள்ளடக்கின்றது.

## 1907ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க தடுத்துவைத்தல் இல்லங்கள் சட்டம்

அலைந்து திரிதலினால் பிடிபட்ட குற்றவாளிகளை தடுத்துவைப்பதற்கு தடுத்தல்வைத்தல் இல்லங்களைத் தாபிப்பதற்கானதொரு சட்டம், அமைச்சரின் அதிகாரங்கள், நீதவானின் அதிகாரங்கள், தடுத்து வைத்தல் கட்டளைகள் வழங்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலைகளில் தடுத்து வைக்கும் இல்லங்களிலிருந்து தப்பிச்செல்கின்றமை, தப்பிச்செல்கின்றமைக்கான தண்டங்கள் தொடர்பான சட்டங்களை இச்சட்டம் உள்ளடக்கியுள்ளது.

## 1895ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சான்றுக் கட்டளைச்சட்டம்

சட்ட நீதிமன்றமொன்றில் சான்றளிக்கும் சட்ட அம்சங்கள் தொடர்பில் ஏற்பாடு செய்கின்றது. ஏற்புடையதான சான்று, எழுத்துமூலவாய்மொழிமூல சான்று, எண்பித்தல், ஒப்புதல்கள் மற்றும் குற்ற ஒப்புதல்கள், சாட்சிகளாக அழைக்கப்பட முடியாத ஆட்களின் கூற்றுகள், விசேட சூழ்நிலைகளின் கீழ் செய்யப்பட்ட கூற்றுக்கள் மற்றும் விசேட சான்றுகளின் எண்பிக்கும் பொறுப்பு என்பவற்றை இது உள்ளடக்கின்றது.

## 1889ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க குடியியல் நடபடி முறைக்கோவை

இலங்கையில் இக்கோவையே குடியியல் நடபடிமுறையினை ஏற்பாடு செய்கின்றது. வழக்கெழு காரணி, சரியான நீதிமன்றத்தைத் தெரிவுசெய்தல், நியாயாதிக்கம், முறைப்பாடுகளை தாக்கல் செய்தல், அழைப்பாணை, சான்றளித்தல், வழக்கொன்றை விளங்குதல், இடைக்கால தடை உத்தரவு, மேன்முறையீட்டு அறிவித்தல் மற்றும் மேன்முறையீட்டுடன் தொடர்பான அதிகாரங்கள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது.

## 1883ஆம் ஆண்டின் 12இலக்க குற்றவியற் கோவை

குற்றவியற் தவறுகளை ஏற்பாடு செய்கின்றதான எழுத்திலமைந்ததொரு ஆவணம். ஆட்களுக்கும் ஆதனங்களுக்கும் எதிரான குற்றங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், ஆபாச வெளியீடுகள் மற்றும் 1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க திருத்தங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கற்பழிப்பும் 1998ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க திருத்தச்சட்டமும்.

## 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடபடிமுறைக் கோவை

குற்றவியல் தவறுகளைச் செய்த ஆட்கள் தொடர்பான நீதிமுறை நடபடி முறையினை ஏற்பாடு செய்கின்ற கோவையாகும். கைது, பொலிஸ் புலனாய்வுகள், வழக்குகளை தாக்கல் செய்தல், சான்று, விளக்கம், பொலிஸ் புலன்விசாரணைகளுக்கு நீதவான் உதவுகின்றமை, மன்றாணை வழங்குதல், நடுக்கட்டன் மற்றும் மேன்முறையீட்டு அதிகாரங்கள் என்பன தொடர்பிலான சட்டங்களை இக் கோவை உள்ளடக்கியுள்ளது.

## 1999ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க பராமரிப்புச் சட்டம்

வாழ்க்கைத் துணையினால் குடும்பத்தின் பராமரிப்பு தொடர்பானதொரு சட்டம். திருமணத்தின் எண்பிப்பு, வருமானத்தை எண்பித்தல், வாழ்க்கைத்தரம் மற்றும் பராமரிப்பு கட்டளைக்கான நீதவானின் அதிகாரங்கள் தொடர்பான சட்டங்களையும் இது உள்ளடக்குகின்றது. பராமரிப்பைச் செலுத்தாத எதிராளிக்கான தண்டத்தினையும் இச்சட்டம் ஏற்பாடு செய்கின்றது.

## 1865ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வயது முதிர்ச்சிக் கட்டளைச் சட்டம்

முதிர்ச்சியடையும் வயதினை இக்கட்டளைச்சட்டம் 21 வயதென ஏற்பாடு செய்கின்றது. ஆயினும் 1987ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தினால் 18 வயதாக இது குறைக்கப்பட்டது.

## 1951ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பிறப்பு இறப்பு பதிவுக் கட்டளைச்சட்டம்

பிறப்புக்களையும் இறப்புக்களையும் பதிவதற்கானதொரு கட்டளைச்சட்டம் ஆகும். பதிவாளர் நாயகம் நியமனம், மாவட்டப் பதிவாளர்களும் அவர்களின்

அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பிறப்புக்களையும் இறப்புக்களையும் பதிவுசெய்வதற்கும் பிணமொன்றை அகற்றுவதற்கான நடபடிமுறைகளை தொடர்பான விசேட சட்டங்களை இது உள்ளடக்கியுள்ளது.

## 1907ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பொதுத் திருமணக் கட்டளைச்சட்டம்

முஸ்லிம்களின் திருமணந்தவிர்ந்த ஏனைய எல்லா திருமணங்களையும் பதிவதற்கானதொரு கட்டளைச்சட்டம். திருமணப் பதிவாளர் நாயகம் மற்றும் பிரதி பதிவாளர் நாயகம் என்போரின் நியமனம் மற்றும் பணிகள், திருமண அறிவித்தலை வெளியிடுதல், திருமணத்திற்கான வயது, தடுக்கப்பட்ட உறவுக்குள்ளான ஆட்களின் திருமணங்கள், திருமணப்பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் சட்டமுரணான திருமணங்களுக்கான தண்டங்கள் தொடர்பான சட்டங்களை இது உள்ளடக்கியுள்ளது இது 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தினாலும், 1997ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க சட்டங்களினாலும் திருத்தப்பட்டது.

## 1952ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க கண்டிய திருமண மற்றும் விவாகரத்துக் கட்டளைச் சட்டம்

கண்டியர் திருமணம், கண்டியர் திருமணத்தின் வலிதாந்தன்மை, நெறிமுறையற்ற சிறுவர்களின் சட்டவாக்கம், திருமணத்துக்கான இணக்கம், பதிவும் நடபடி முறையும் மற்றும் கண்டிய திருமணத்தின் விவாகரத்து என்பவற்றுக்கான சட்டங்களை இது உள்ளடக்குன்றது.

## 1939ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டமும் அதன் ஒழுங்குவிதிகளும்

முறைசார் கல்விக்கான சட்டங்களைக் கொண்டுள்ள கட்டளைச் சட்டமொன்றாகும். மத்திய அரசாங்கத்தின் கீழான கல்வித் திணைக்களம், ஆலோசனைப் பேரவைகள், கிராமிய மற்றும் நகர கல்வி அதிகாரிகளின் அதிகாரங்கள், அரசியலமைப்பு, கடமைகள், பாடசாலைகளின் வகையும் முகாமைத்துவமும், ஒழுங்குவிதிகளை அமுல்செய்தல் மற்றும் அரசாங்க பாடசாலைகள் மீதான அமைச்சரின் அதிகாரங்கள் என்பவற்றுடன் தொடர்பான சட்டங்களை இது ஏற்பாடு செய்கின்றது

## 1948ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க குடிவருவோர் குடியகல்வோர் கட்டளைச்சட்டம்

இலங்கைப் பிரசையல்லாத ஆட்கள் இலங்கைக்குள் நுழைவதனை கட்டுப் படுத்தவும், பிரசைகள் மற்றும் இலங்கைப் பிரசையல்லாத ஆட்கள் இலங்கையை விட்டு வெளியேறுவதனை ஒழுங்குபடுத்துவதற்கும், இலங்கைப் பிரசையல்லாத விரும்பப்படாத நபர்களை இலங்கையை விட்டு அகற்றுவதற்கும் அதனுடன் தொடர்புடைய விடயங்களுக்காகவுமான ஏற்பாடுகளைச் செய்கின்ற கட்டளைச் சட்டமொன்றாகும். நிருவாகத்துக்கான ஒழுங்குகளையும் இக்கட்டளைச்சட்டம் ஏற்பாடு செய்கின்றது.

## 1979ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க மகவேற்பு கட்டளைச்சட்டம்

பிள்ளைகளின் மகவேற்பு, சிரத்தை, கட்டுக்காவல் மற்றும் இயற்கை பெற்றோரல்லாதவர்களிடமுள்ள பிள்ளைகளின் கட்டுப்பாடு என்பவற்றைக் கொண்டுள்ள ஆட்களான கட்டுக் காவலாளிகளைப் பதிவுசெய்தல் மற்றும் அதனுடன் தொடர்பான விடயங்களுக்கான சட்டங்களை ஏற்பாடு செய்கின்றதொரு கட்டளைச்சட்டமாகும்.

## 1978ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நீதியியற் சட்டம்

அரசியலமைப்பின் உறுப்புரை 105(1)இன் கீழான நீதிமன்றங்களை தாபிப்பதற்கான வாசகங்களை ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம். நீதிமன்றங்கள் மற்றும் அவற்றின் நியாயாதிக்கம், மேல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், நீதவான் நீதிமன்றங்களும் ஆரம்ப நீதிமன்றங்களும் மற்றும் பொதுவான நீதிமன்ற முறைமை தொடர்பான சட்டங்களை இது உள்ளடக்கியுள்ளது.

## 1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்கள், இளம்ஆட்கள் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்தல் கட்டளைச்சட்டம்

பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்தல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ள கட்டளைச்சட்டமொன்றாகும். இரவுநேர வேலை, கடலில் தொழிலுக்கமர்த்தல் மற்றும் ஏனைய பொதுவான கடமை களுடன் தொடர்பான சட்டங்களை ஏற்பாடு செய்கின்றது. இரவுநேர வேலைகள் மீதான மட்டுப்பாடுகள், எச்சூழ்நிலைகளில் இம்மட்டுப்பாடுகள் பிரயோகிக்கப்பட மாட்டாது, பயிலுனர்களுக்கும் பயிற்சிபெறுபவர்களுக்குமான இரவுநேர வேலையிடையான சிறிய ஓய்வு, பயிலுனர்களுக்கான பதிவேடுகளைப் பேணிவருதல் என்பவற்றுக்கான வாசகங்களை ஏற்பாடு செய்கின்ற கட்டளைச் சட்டமொன்றாகும்.

## 1979ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க மதுபோதையினால் செய்யப்பட்ட குற்றங்கள்

மதுபோதையின் கீழ் செய்யப்பட்ட குற்றங்களுக்கான தண்டங்களை அதிகரிப்பதற்கான கட்டளைச் சட்டமொன்றாகும். ஆட்களுக்கு எதிராக செய்யப்பட்ட தொல்லைகள், பொதுச்சொத்தினை அழித்தல், 12 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கு மதுபானத்தை வழங்குதல், 18 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கு போதைப்பொருட்களை விற்பனை செய்தல், இத்தகைய குற்றங்களுக்கான தண்டங்கள் மற்றும் நீதித்துறையின் அதிகாரங்கள் என்பவற்றுக்கான சட்டங்களை இது ஏற்பாடு செய்கின்றது.

## 1941ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க அனாதைகள் கட்டளைச்சட்டம்

அனாதைச் சிறுவர்களினதும் கைவிடப்பட்ட சிறுவர்களினதும் தங்குமிடம், பராமரிப்பு மற்றும் கவனிப்பு என்பவற்றுக்கான அனாதைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களையும் பதிவு செய்தல், கட்டுப்பாடு என்பவற்றுக்கானதும் அதனுடன் தொடர்பான நோக்கங்களுக்காகவும் ஏற்பாடுகளை வழங்குகின்றதானதொரு கட்டளைச்சட்டமொன்றாகும். அனாதைகளைப் பதிவு செய்தல், அனாதைகள் பற்றிய பதிவேடுகள், பதிவும் விண்ணப்பமும், அனாதைகள் பரிசோதகர், பதிவுச் சான்றிதழ்கள், வருகை தருவோர்கள், பதிவுகளை ரத்துச்செய்தல் மற்றும் சிறுவர் இல்லங்கள் தொடர்பான சட்டங்களையும் இது ஏற்பாடு செய்கின்றது.

## இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பு

### உறுப்புரை 12 (4)

"இவ்வுறுப்புரையிலுள்ளஎதுவும், பெண்களின், பிள்ளைகளின் அல்லது இயலாமையுள்ள ஆட்களின் முன்னேற்றத்துக்காக சட்டத்தின் மூலம், துணைநிலைச் சட்டவாக்கத்தின் மூலம் அல்லது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பேற்பாடுகள் செய்யப்படுவதனைத் தடுத்தலாகாது."

### உறுப்புரை 27 (13)

"பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் உடல்வளர்ச்சியை உள வளர்ச்சியை, ஒழுக்க வளர்ச்சியை, மத வளர்ச்சியை, சமூக வளர்ச்சியை முழுமையாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும், சுரண்டலிலிருந்தும் ஓரங்காட்டப்படுவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் என, அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்துதல் வேண்டும்."

# சிறுவர் உரிமைகள் - தேசிய சட்டவாக்கம்

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தை இலங்கை 1991ஆம் ஆண்டு ஏற்றங்கீகரித்தது. இதற்கிணங்க இலங்கை அரசாங்கம் சிறுவர் உரிமைகளின் தேசிய நிலைமைகள் மீதான அறிக்கையொன்றினை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை சிறுவர் உரிமைகள் பற்றிய சர்வதேச குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. மேலும் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட, சிறுவர்களை ஆயுதமோதலில் சேர்த்துக்கொள்வதற்கு எதிரான விருப்புரிமைப் பின்னேட்டையும் இலங்கை அரசாங்கம் ஏற்றங்கீகரித்துள்ளது.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின்படி, சிறுவர் உரிமைகளின் மிகவும் பிரதான பகுதிகள் பின்வருமாறு அமையும்.

- ❋ உயிர் வாழ்வு
- ❋ அபிவிருத்தி
- ❋ பாதுகாப்பு
- ❋ பங்கு பற்றல்

என்பன சிறுவர்களின் உரிமையாகும்.

## உயிர்வாழ்வதற்கான உரிமை

- ஒவ்வொரு பிள்ளையும் இயற்கையாகவே கிடைத்துள்ள உயிர் வாழும் உரிமையைக் கொண்டுள்ளதுடன் யுத்தம், இயற்கை அனர்த்தம், எச்.ஐ.வி.(எயிட்ஸ்), மந்தபோசனை, அபாயகரமான தொழிலில் அமர்த்தல் மற்றும் சித்திரவதை போன்ற எல்லா வகையான ஆபத்துக்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கவும் எல்லா அரசத் தரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனர். *(உறுப்புரை 6)*
- அவனின் அல்லது அவளின் அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் சிறுவர் உரிமைக்கு மதிப்பளிக்கப்படுவதனை அரசத் தரப்பினர் பொறுப்பேற்றுக் கொள்கின்றனர். *(உறுப்புரை 7)*

## அபிவிருத்திக்கான உரிமை

- சிறுவர்களை வளர்ப்பதிலும் அபிவிருத்தியடையச் செய்வதற்குமான ஆரம்பப் பொறுப்பு பெற்றோரிடம் அல்லது சட்டமுறையான பாதுகாவலரிடம் உள்ளது. *(உறுப்புரை 18)*

- சுகாதாரக் கவனிப்பு வசதிகளை அடைந்துகொள்வதற்கான அவனின் அல்லது அவளின் உரிமை மறுக்கப்படாதிருப்பதனை அரசுத் தரப்பினர் உறுதிப்படுத்த முயலுதல் வேண்டும். *(உறுப்புரை 24)*
- ஒவ்வொரு பிள்ளையும் சமூகக் காப்புறுதி அடங்கலான சமூகப் பாதுகாப்பின் நலனைப் பெறும் உரிமையுடையது என்பதனை எல்லா அரசுத் தரப்பினரும் ஏற்றுக் கொள்கின்றனர். *(உறுப்புரை 26)*
- ஒவ்வொரு பிள்ளையும் அதன் உடல், உள, ஆன்மீக, ஒழுக்க, சமூக மேம்பாட்டுக்கு ஏற்றவாறான வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்கும் உரிமையுடையது என்பதனை எல்லா அரசுத் தரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனர். *(உறுப்புரை 27)*
- சமவாய்ப்பு அடிப்படையிலான கல்வி கற்கும் உரிமை பிள்ளைக்கு உண்டு என்பதனை எல்லா அரசுத் தரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனர். *(உறுப்புரை 28)*
- ஒவ்வொரு பிள்ளையும் அவனுக்கு அல்லது அவளுக்கு உரித்தான கலாச்சாரத்தை அனுபவிப்பதுடன் அவனின் அல்லது அவளின் சமயத்தை அனுஷ்டிக்கவும் நடைமுறைப்படுத்தவும், அவனுக்கு அல்லது அவளுக்கு உரித்தான மொழியை உபயோகிப்பதற்குமான உரிமை. *(உறுப்புரை 30)*

## பாதுகாப்பிற்கான உரிமை

- உளவியல் மற்றும் உடலியல் வன்முறை போன்ற சகல வகையான தீங்குகளிலிருந்தும் பிள்ளையைப் பாதுகாப்பதற்கு பொருத்தமான சட்டவாக்க, நிருவாக, சமூக மற்றும் கல்வி நடவடிக்கைகளை அரச தரப்பினர் எடுத்தல் வேண்டும் *(உறுப்புரை 19)*.
- உள்ளத்தைப் பாதிக்கக்கூடிய பொருட்களைச் சட்டவிரோதமாக பிள்ளைகள் பாவிப்பதனைவிட்டும் பிள்ளையைப் பாதுகாப்பதற்கு பொருத்தமான சட்டவாக்க, நிருவாக, சமூக மற்றும் கல்வி நடவடிக்கைகள் உட்பட பொருத்தமான எல்லா நடவடிக்கைகளையும் அரச தரப்பினர் எடுத்தல் வேண்டும் *(உறுப்புரை 33)*.
- எல்லா வகையான பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து சிறுவரைப் பாதுகாப்பதனை அரச தரப்பினர் பொறுப்பேற்க வேண்டும். *(உறுப்புரை 34)*
- சிறுவர் கடத்தப்படுதல், விற்றல் மற்றும் பலாத்காரமாகக் கொண்டு செல்லப்படுதல் என்பவற்றை தடுப்பதில் பொருத்தமான தேசிய, இருதரப்பு மற்றும் பல்தரப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல் வேண்டும் *(உறுப்புரை 35)*.

- எந்தப் பிள்ளையும் சித்திரவதைக்கோ, குரூரமான மனிதத் தன்மையற்ற நடத்தைக்கோ அல்லது தரக்குறைவான நடாத்தைக்கோ அல்லது தண்டனைக்கோ உட்படலாகாது என்பதனை அரச தரப்பினர் உறுதிசெய்தல் வேண்டும். *(உறுப்புரை 37)*
- ஆயுதப் பிணக்குகள் தொடர்பான சர்வதேச மனிதாபிமானச்சட்ட விதிகளில் பிள்ளைகளுக்குப் பொருத்தமான விதிகளை மதிக்கவும் மதிக்கப்படுவதனை உறுதிப்படுத்தவும் அரச தரப்பினர் பொறுப் பேற்றல் வேண்டும். *(உறுப்புரை 38)*

## பங்குபற்றுவதற்கான உரிமை

- தற்போதைய சமவாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் உரிமைகளை பிரயோகிக்கையில் பொருத்தமான வழிமுறை மற்றும் வழிகாட்டல் வழங்குவதற்குள்ள பெற்றோரின் அல்லது சட்ட பாதுகாவலர்களின் பொறுப்புக்கள், உரிமைகள் மற்றும் கடமைகளை அரசுத் தரப்புக்களானது மதித்தல் வேண்டும். *(உறுப்புரை 5)*
- தானாகவே கருத்துக்களை எண்ணித்துணியும் ஆற்றலுடைய பிள்ளைக்கு, அதனைப் பாதிக்கும் எல்லா விடயங்களிலும் அவனின் அல்லது அவளின் சொந்தக் கருத்தை வெளிப்படுத்தும் உரிமையை அரச தரப்பினர் உறுதிப்படுத்துகின்றனர். *(உறுப்புரை 12)*
- தகவல்களைத் தேடவும், பெறவும், பிறருக்குப் பரிமாறவும் பிள்ளைக்கு உள்ள சுதந்திரத்தை உள்ளடக்கியதான பேச்சு சுதந்திரம் பிள்ளைக்கு இருத்தல் வேண்டும். *(உறுப்புரை 13)*
- சிந்தனை மனச்சாட்சி, சமயம் என்பனவற்றுக்கான சுதந்திரத்துக்குப் பிள்ளை உரித்துடையது என்பதனை அரசதரப்பினர் மதித்தல் வேண்டும். *(உறுப்புரை 14)*
- பிள்ளைகள் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுசேரும் சுதந்திரம் என்பன உடையவர்கள் என்பதனை அரச தரப்பினர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். *(உறுப்புரை 15)*
- பிள்ளை உரிமைகளின் பாதுகாப்புக்கான எல்லா வசதிகளை உறுதி செய்கின்றதான சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் ஆக்குவதற்கான ஒரு பொறுப்புடைமை அரச தரப்பினருக்கு உள்ளது.
- சிறுவர் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தின் அடிப்படையில் ஒரு தேசிய சிறுவர் உரிமைகள் பட்டயத்தினை தயாரிக்கப்பட்டது. ஆயினும், இப்பட்டயம் சட்டத்தினால் வலுப்படுத்தக் கூடியதன்று.

# சிறுவர்களுக்கு எதிராக புரியப்படுகின்ற குற்றச்செயல்கள்

## சிறுவர்களை வேலைக்கமர்த்தல்

பதினான்கு வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் சட்ட முரணானதாகும். *(கடை மற்றும் காரியாலய வேலையாட்கள் சட்டம்)*

## பாலியல் துஷ்பிரயோகம்

நெருங்கிய உறவினர்கள் அல்லது ஏதாவது மூன்றாவது தரப்பினால் அவர்களின் வீடுகளில், பாடசாலைகளில், பொழுதுபோக்கு மையங்கள், சிறுவர்களின் பாதுகாப்பு இடங்கள் மற்றும் பொலிஸில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிர யோகத்துக்கு உட்படலாம்.

## சிறுவர் போராளிகள்

சிறுவர்கள் எல்.ரீ.ரீ.ஈ யினால் அல்லது வேறு ஏதாவது சட்டமுரணான இயக்கங்களினால் யுத்தத்திலீடுபடும் நோக்கத்துக்கு சேர்த்துக்கொள்ளப்படலாம்.

## சிறுபராய குற்றவாளிகள்

சட்டமுரணான செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் சிறுவர்களைப் பாவித்தல் சட்டமுரணானதாகும்.

*(தண்டனைச் சட்டக்கோவை 1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க திருத்தம்)*

## சிறுவர் கைதிகள்

சிறைச்சாலைகளில் வளர்ந்த சிறைக்கைதிகளுடன் சிறுவர்கள் தடுத்து வைக்கப்படுகின்ற வேளையில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. சான்றுப்படுத்திய பாடசாலைகளில், சிறுவர் இல்லங் களிலும் ஏனைய புனர்வாழ்வு நிலையங்களிலும் காலங்குறிப்பிடாது சிறுவர்கள் தடுத்துவைக்கப்படுகின்றமை.

# சிறுவர் துஷ்பிரயோகம்

- சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன?
- சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்துகொள்வதில் தகுந்த நடவடிக்கைகளை எவ்வாறு எடுக்கலாம்?

## எத்தகைய வழிகளில் சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெறலாம்

- உடல் ரீதியான துஷ்பிரயோகம்
- பாலியல் துஷ்பிரயோகம்
- உணர்வு ரீதியான துஷ்பிரயோகம்
- அலட்சியஞ்செய்தல்

### உடல் ரீதியான துஷ்பிரயோகம்

வளர்ந்த ஒருவரால் அல்லது கணிசமான வயதடைந்தவரால் அல்லது சக்திமிகுந்த சிறுவரால், உடல் ஊறொன்றினை சிறுவருக்கு ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக்கூடியதான எண்ணிச்செய்த, விபத்தல்லாததொரு உடலியல் தாக்குதல் அல்லது நடவடிக்கை ஆகும்.

### உடல் ரீதியான துஷ்பிரயோகம் நிகழக்கூடியதான குறிகாட்டிகள்

### உடல்ரீதியான குறிகாட்டிகள்

- வழங்கப்பட்ட விளக்கங்களை உறுதிப்படுத்தாத ஊமைக்காயங்கள், சாட்டையால் அடித்த தழும்புகள், எரிகாயங்கள், கடிபட்ட அடையாளங்கள், முறிவுகள் முதலிய காயங்கள். (உ.ம். ஒரு இடத்தில் நீண்டதாகவுள்ள ஊமைக்காயங்கள்)
- குணமாகும் வேறுபட்ட கட்டங்களில் பல்வேறு காயங்கள் (3+) இருக்கின்றமை.
- குறிப்பிட்டதொரு காலத்திற்கு அதிகமாக தொடர்ந்திருந்து வருகின்ற காயங்கள்.

- அக்காயத்தை உண்டாக்குவதற்கு பாவிக்கப்பட்ட பொருளைக் காட்டிநிற்கும் வகையிலான ஒரு வடிவத்தை அல்லது மாதிரியை அமைக்கும் காயங்கள் (உ-ம்: சொக்கி, கை, இஸ்திரிப்பெட்டி, பல், சிகரட் சூடுகள்)
- குழந்தைகளினதும் முன்பள்ளி மாணவர்களதும் முகங்களிலுள்ள காயங்கள் (உ-ம்: வெட்டுக்கள், ஊமைக்காயங்கள், புண்கள் என்பன)
- சிறுவரின் வயதுடனும் வளர்ச்சியுடனும் ஒத்திராத காயங்கள்.
- சிறுவரின் தலையில் முடிகள் அகற்றப்பட்டிருப்பதான மொட்டை ஒட்டுக்கள்
- தொடரும் நஞ்சூட்டல்களும் அல்லது விபத்துக்களும்.

## நடத்தை ரீதியான குறிகாட்டிகள்

- வெளியே ஓடும் முயற்சிகளும் வீட்டுக்குச் செல்ல அச்சப்படுதலும்.
- படாடோபமான கலந்துரையாடல்கள், வெறுமையாக விறைத்துப்பார்த்தல் அல்லது உறைந்துபோன பார்வை. காயமேற்பட்ட போதிலும் சுகத்தை நாட முயற்சிக்காமை.
- தன்னைத்தானே தவறாக விபரித்தலும் தண்டனையை ஏற்றலும்.
- காயங்கள் எப்படி ஏற்பட்டதென்பது ஞாபகப்படுத்த முடியாதிருத்தல் அல்லது முரண்பாடான விபரிப்புக்களை வழங்குதல்.
- வளர்ந்தவர்களில் எச்சரிக்கையாக இருத்தல் அல்லது வீடு செல்ல விருப்பமின்மை.
- பாடசாலைக்கு அல்லது சிறுவர் சிரத்தைக்கு அடிக்கடி சமூகமளிக்காமை.
- எதிர்பாராத விதமாக தொடப்பட்டால் அச்சத்தால் கூசியொதுங்கலாம்.
- மிகக் கடுமையான கோபமேற்படக் கூடியதான அல்லது பின்வாங்கும் தன்மை.
- பாரபட்சமற்ற அன்பை நாடுவதனைக் காட்டும் நடத்தை வெளிக்காட்டி நிற்றல்.
- இழிவான நடத்தையும் உரையாடும் மொழியும்.
- மிகஅதிகமாக முறையிடுதலும் அல்லது மன்னிப்பைக் கெஞ்சி நிற்றலும்.
- குறைபாடான தங்கும் முறைகள், இருளுக்கு அஞ்சுகின்றமை, அடுத்தடுத்துவரும் கெட்ட கனவுகள்.

- சோகமாயிருத்தல், அடிக்கடி கூச்சலிடல்.
- போதைப்பொருள் அல்லது மதுபான துஷ்பிரயோகம்.
- சோர்வடைந்திருத்தல்.
- ஞாபக மற்றும் கிரகிக்கும் தன்மை குறைவு.
- தற்கொலை முயற்சிகள்.

## பாலியல் துஷ்பிரயோகம்

வயதுவந்த ஒருவரால் அல்லது கணிசமான வயதுடைய ஒருவரால் அல்லது சக்தி மிக்க சிறுவர் ஒருவரினால் ஏதாவது பாலியல் தேவையை பாலியல் துஷ்பிரயோகம் என பொதுவாக கருதப்படுகின்றது

## பாலியல் துஷ்பிரயோகம் நிகழக்கூடியதான குறிகாட்டிகள்

### உடல் ரீதியான குறிகாட்டிகள்

- தூக்கம் கலைந்ததன் காரணமாக சோர்வுற்றிருத்தல்.
- நிறையில் திடீர் மாற்றம்.
- கையில் வெட்டுக்கள் அல்லது புண்கள் சிறுவரால் உண்டாக்கப்பட்டிருத்தல் (தானாக சேதமேற்படுத்தல்).
- மறுபடிமறுபடி ஏற்படும் உடல் நோய்கள்.
- நடப்பதில் அல்லது அமர்ந்திருப்பதில் சிரமப்படுதல்.
- தொற்றுக்கள் காரணமாக புறப்பாலுறுப்புப் பகுதியில் வழக்கமற்ற அல்லது மிகையான சொறி/சிரங்குகள் ஏற்பட்டிருத்தல்.
- கிழிந்த, கறையுள்ள அல்லது இரத்தம் தோய்ந்த உள்ளாடைகள்.
- பாலியல் ரீதியாக காவப்படும் நோய்கள்).
- கருவுற்றிருத்தல்.
- வாயில், புறப்பாலுறுப்புப் பகுதியில் காயங்கள் ஏற்பட்டிருத்தல் (உ-ம்: நகக்குக் காய் ஏற்பட்டிருக்கின்றமை, வீக்கமுற்றிருத்தல், புண்கள், தொற்றுக்கள்).

## நடத்தை ரீதியான குறிகாட்டிகள்

- சோகமாயிருத்தல், அடிக்கடி அழுதல், அதிகமாக கவலையடைதல்.
- ஆவலின்மை அல்லது ஆவலில் மாற்றமிருத்தல்.
- நண்பர்களிலும் வேலைகளிலும் திடீரென அக்கறை குறைவடைதல்.
- பிற்போக்கான தொடர்பாடல் முறைகள் (உ-ம்: சிறுபிள்ளைத்தனமாக பேசுதல்).
- வயதுக்குப் பொருந்தாத, பாலியலை வெளிக்காட்டும் சித்திரங்களும் அல்லது விவரணங்களும்.
- வீட்டுக்கு அல்லது குறித்ததொரு இடத்துக்கு அச்சப்படுதல், ஆண்களுக்கு அல்லது பெண்களுக்கு மிகையாக அச்சப்படுதல், மற்றவர்களில் நம்பிக்கை குறைவாக இருத்தல்.
- தற்கொலை முயற்சிகள்.
- போதைப்பொருள்/மதுபான துஷ்பிரயோகம்.
- உடற்கூற்று காரண அடிப்படையின்றி உடல்ரீதியான தொடரும் முறைப்பாடுகள் (உ-ம்: வயிற்று வலி, தலையிடி, வாந்தியுணர்வு).

## உணர்வு ரீதியான துஷ்பிரயோகம்

வாழ்க்கைக்கு நிலையாய் தேவையானவற்றை மறுப்பதற்காக சிறுவரின் பழக்கத்தை இழிவுபடுத்தலிலிருந்து உணர்வு ரீதியான துஷ்பிரயோகத்தினை வகைப்படுத்தலாம்.

## ஒரு சிறுவர் துஷ்பிரயோகத்தை வெளிப்படுத்தும் போது.

- துஷ்பிரயோகத்துக்குள்ளான அல்லது புறக்கணிப்புக்குள்ளான பிள்ளையொன்றுக்கு நம்பக்கூடியவரும் அவனது தனது பிரச்சனைகளைச் சொல்லக்கூடியவருமான ஒரு நபரே தேவைப்படுகிறார். தான் உட்பட்டிருக்கின்ற அனுபவம் காரணமாக அந்த சிறுவன் பயந்தவனாக, கவலையுடையவனாக அல்லது வெட்கமுடையவனாக மாறுகிறான். நீங்கள் அப்பிள்ளை மீது காட்டும் அமைதியான பிரதிபலிப்புக்கேற்பவே, அப்பிள்ளைக்கு ஏற்பட்ட குற்றம் அல்லது துஷ்பிரயோகம் பற்றி எந்த விபரத்தையும் மறைக்காது கூறுவதற்கு அப்பிள்ளை முன்வரும்.

- துஷ்பிரயோகத்துக்குள்ளான சிறுவரொருவர் உங்களிடம் அதுபற்றிக் கூறும் போது அது போதுமற்றதாக அல்லது நம்பமுடியாததாக இருப்பதாக நீங்கள் என்ன செய்வது அல்லது என்ன சொல்வது என்பதுபற்றி சிந்திப்பது சாதாரணமானதாகும். அதன் காரணமாக அதிகமான விடயங்களை கேட்டுத்தெரிந்துகொள்ள வேண்டும் என்ற போக்கு காணப்படும். அடுத்தடுத்து அதிகமான கேள்விகளை அவசரமாக கேட்கவேண்டி யிருக்கும். அமைதியாகத் தொடருங்கள். 'தயவுசெய்து உங்களுக்கு ஏற்பட்டவை தொடர்பாக மேலும் ஏதாவது கூறமுடியுமா?' போன்ற பொதுவான கேள்விகள் உதவியாயிருக்கும். செயலுக்கு காரணமாய் அமையக்கூடியதான கேள்விகளான 'ஏன் நீங்கள் அவரைத் தாக்கினீர்கள்?' போன்றவற்றைத் தவிர்க்கவும். இத்தகைய கேள்விகள் சிறுவர்கள் ஏதாவது தவறினைச் செய்திருக்கலாம் என்பதனை நேரடியாகவல்லாமல் சாட்டிநிற்பதனால் இவ்விடயம் பற்றி சிறுவர் கலந்துரையாடுவதனை விருப்பமற்றதாக்கச் செய்யும்.
- எப்போதும் அவர்களுக்கு ஒத்துழைப்பாகவே செயற்படுங்கள்.
- நீங்கள் அச்சிறுவருக்கு.
  - ✓ அச்சிறுவன் எப்பிரச்சனையிலும் இல்லை என்றும்.
  - ✓ அவன் உங்களுடன் பாதுகாப்பாக இருப்பதாகவும்.
  - ✓ இது பற்றி அவன் கூற உங்களைத் தெரிவு செய்தமைக்காக நீங்கள் மகிழ்ச்சியடைவதாகவும்.
  - ✓ உங்களுக்கு அவன் கூறுவதனால் சரியான விடயத்தை அவன் செய்துள்ளதாகவும்.
  - ✓ இவ்வாறு அவனுக்கு நடைபெற்றதையிட்டு தான் கவலையடைவதாகவும்.
  - ✓ அவனை அல்லது அவளைப் பாதுகாப்பதற்கான எல்லாவற்றையும் தான் செய்ய இருப்பதாகவும்.
  - ✓ இப்பிரச்சனையைத் தீர்க்க உதவி செய்யக்கூடியவர்களையும் தனக்குத் தெரியும் என்றும்.

  தெரிவியுங்கள்.
- அடுத்து என்ன நடைபெறும் என்பதனை அச்சிறுவனுக்கு கூறுவதுடன், உங்கள் மீதான அவனது நம்பிக்கையை உறுதிசெய்யுங்கள்.
- தமக்கு ஏற்பட்ட துஷ்பிரயோகத்தை வெளிப்படுத்திய சிறுவர்கள், தம்மைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் என்றும் அடுத்து என்ன

நடக்கப்போகிறது என்றும் பயந்தவர்களாகவும் பலவீனமானவர்களாகவும் இருப்பர். ஆனால், அடுத்து என்ன நடக்கலாம் நடக்காதென்றோ அவர்களுக்கு வாக்குறுதியளிக்க வேண்டாம்.

- துஷ்பிரயோகம் அல்லது அலட்சியம் பற்றி சிறுவரினால் செய்யப்பட்ட கருத்துரைகள் அனைத்தையும் சாத்தியமானளவு சிறுவர் உபயோகித்த அவ்வாறான சொற்களைக் கொண்ட குறிப்பு ஒன்றினைத் தயார் செய்க. சம்பவம் தொடர்பாக அச்சிறுவனால் செய்யப்பட்ட எல்லா வரை படங்களையும் சித்திரவேலைகளையும் பத்திரமாய் வைத்திருக்கவும்.

## புலனாய்வுகளின் போது கவனிக்க வேண்டிய பொதுவான விடயங்கள்

சிறுவர் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு அல்லது குற்றவியல் புலனாய்வுகளுக்காக அவ்வாறாரே சிறுவரொருவரை நேர்காணும் அதிகாரம் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரிக்கும் அல்லது பொலிஸாருக்கும் உள்ளது.

சிறுவரை உணர்வுபூர்வமாக கவனித்தல் என்பது முன்னுரிமையளிக்க வேண்டிய தொன்றாகும். வெளிப்படுத்தலை அல்லது அறிக்கையைத் தொடர்ந்து சாத்தியமானளவு உடனடியாக நேர்காணல் நடைபெறல் வேண்டும் என்பதுடன், நேர்காணல்களின் எண்ணிக்கையும் காலஅளவும் முடிந்தளவு குறைவான தொன்றாக வைத்திருத்தல் வேண்டும்.

மிகவும் இளமையான அல்லது ஏதாவது குறைபாடுகளையுடைய சிறுவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு விசேட நுட்பமுறைகள் தேவைப்படலாம். தொடர்பாடலில் சிறுவர் சிரமத்தை கொண்டிருக்கும் போது, நேர்காண்பவர் தொடர்பாடலில் விசேடத்துவம் மிக்க ஒருவரை நேர்காணலில் சமூகமளித் திருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். சிறுவர் ஒருவர் நேர்காணப் படவுள்ள இடமானது பாதுகாப்பானதாகவும் அச்சமூட்டாததாகவும் என சிறுவரினால் உணர்ந்து கொள்ளப்படக் கூடியதொரு இடமாக இருத்தல் என்பது முக்கியமானதாகும். அச்சிறுவருக்கு ஏதாவது இயலாமையொன்று இருக்குமெனில், அதற்கு பொருத்தமான இடமொன்றைத் தெரிவு செய்து கொள்ளலாம். நேர்காணும் இடமானது பொலிஸ் நிலையம் போன்றதொரு வயதடைந்தோர் இருக்கின்ற இடமாக இருப்பின், அவ்வறையை சிறுவருக்கு சௌகரியமுள்ளதாகவும் சிறுவருக்கு உவப்பானதொரு இடமாகவும் முடியு மானளவு மாற்றியமைத்துக் கொள்ளவும்.

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் அறிவிக்க வேண்டிய இடங்களும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளும்

- சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் திணைக்களம்
- சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் மாகாணத் திணைக்களங்கள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
இல. 330
தலவத்துகொட வீதி
மெதிவெல, கோட்டை
தொலைபேசி இல. 011 2779196
011 2778911 15

பொலிஸின் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பணியகம்
இல. 25, வைட் பிளேஸ் கட்டடம்,
சேர் பொரன் ஜயதிலக மாவத்தை,
கொழும்பு 01.
தொலைபேசி இல. 011 2444444

## சிறுவர் ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ள போது அவ்விடயம் சாட்டப்படக்கூடியது

- உயர் நீதிமன்றம்
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
- ஆளொட்சியதிகாரி (ஓம்புட்ஸ்மன்)

அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டது தொடர்பான மனுவொன்று அத்தகைய மீறல் நடைபெற்று ஒருமாதத்தினுள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும்.

ஆனால், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்று செய்யும் போது இந்த மட்டுப்பாடு ஏற்புடையதாகாது என்பதுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முடிவில் முறைப்பாட்டாளர் திருப்தியடையவில்லையாயின், அம்முடிவுத்திகதியிலிருந்து ஒருமாதத்தினுள் அடிப்படை உரிமைகள் மனுவொன்றினை தாக்கல் செய்யலாம். சம்பவம் நடைபெற்ற திகதியிலிருந்து

ஒரு வருடத்திற்குள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றைச் செய்யலாம். ஆயினும், சிறுவரொருவர் தொடர்பான விடயமாக இருப்பின் அத்தகைய முறைப்பாடொன்றை முடியுமானளவு விரைவாக செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

## சட்ட உதவியைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள்

**மனித உரிமைகள் நிலையம்,**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்,
இல. 153, மிகுந்து மாவத்தை,
கோட்டடி, கொழும்பு 12.
தொலைபேசி இல.: 011 2447134, 011 2331697, 011 2387477

**சர்வோதய சட்ட உதவிச் சேவைகள்.**

இல. 96, ராவத்தாவத்தை வீதி,
மொரட்டுவை.
தொலைபேசி இல.: 011 26546490

**மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான சட்டத்தரணிகள்.**

இல. 233/1, கொட்டா வீதி,
பொரளை, கொழும்பு 08.
தொலைபேசி இல.: 011 2686180, 011 2687665
E.mail: lhrd@dynaweb.lk , lhrd@sltnet.lk

**சட்ட உதவி ஆணைக்குழு.**

மேல் நீதிமன்றக் கட்டடத்தொகுதி,
கோட்டடி, கொழும்பு 12
தொலைபேசி இல.: 011 2433618

**சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளைகள்**

- மாத்தறை - (041) 22 24821
- குருநாகல் - (035) 22 31790
- கண்டி - (081) 44 44614
- அம்பாறை - (063) 22 23496

- மொனறாகலை - (055) 22 76891
- கேகாலை - (035) 22 31790
- நுவரேலியா - (052) 22 35260
- அனுராதபுரம் - (025) 22 24465
- ஹம்பாந்தோட்டை - (047) 22 21092
- நீர்கொழும்பு - (031) 22 31636
- மாத்தளை - (053) 22 30419

**பாலியல் துஷ்பிரயோகம், சித்திரவதை, கொடூரமான அல்லது மனிதாபிமானமற்ற நடாத்துகைக்கு உள்ளான சிறுவரொருவரைச் நீங்கள் சந்திக்கும் போது.**

- முடிந்தளவு விரைவாக வைத்திய பரிசோதனையொன்றுக்காக நீதிமன்ற மருத்துவ அதிகாரிக்கு அல்லது யாராவது வைத்தியரிடம் அல்லது வைத்தியசாலையொன்றில் அவனை அல்லது அவளை அனுமதிக்கவும்.
- அப்பகுதியில் வைத்தியர் இல்லையாயின் அல்லது வேறு ஏதாவது பிரச்சனையை எதிர்நோக்கினால், கொழும்பு அல்லது வேறு ஏதாவது பல்கலைக்கழகத்தின் சட்ட மருத்துவப் பிரிவிடம் ஆலோசனை பெறலாம்.
- அச்சிறுவர் 16 வயதுக்குட்பட்டவராக இருப்பின், அத்தகைய பரிசோதனைக்கான அனுமதியை பாதுகாவலரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**சட்ட மருத்துவ திணைக்களம்**

மருத்துவ பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
கின்ஸி வீதி,
கொழும்பு 08.
தொலைபேசி இல. 011 269 4016

**சட்ட மருத்துவ திணைக்களம்**

மருத்துவ பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை
தொலைபேசி இல.: 081 223 88083

### சட்ட மருத்துவ நிணைக்களம்

மருத்துவ பீடம்
WFD பல்கலைக்கழகம்
இல. 70, காலி.
தொலைபேசி இல.: 091 223 4416

### சட்ட மருத்துவ நிலைக்களம்

மருத்துவ பீடம்
களனி பல்கலைக்கழகம்
ராகமை
தொலைபேசி இல.: 011 2958039, 011 2956152

பரிசோதனைக்கு முன்னர் குறித்த சிறுவரின் பாதுகாவலர் அனுமதி வழங்க மறுத்தால் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## போதைப்பொருளுக்கு பழக்கப்பட்ட சிறுவர்களுக்கான புனர்வாழ்வு நிலையங்கள்

### அபாயகரமான ஔடதங்களைத் தடுப்பதற்கான தேசியப் பேரவை

இல. 383, கோட்டா ரோட்,
ராஜகிரிய.
தொலைபேசி இல.: 011 2868794 -6
பெக்ஸ் இல.: 011 2868791

### சுமித்ரயோ

மேல் மெதுர
இல. 60, ஹோட்டன் பிளேஸ்,
கொழும்பு 07.
தொலைபேசி இல.: 011 2692909

### போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கான புனர்வாழ்வு நிலையம்

மெத்செவன
மாம்பிட்டிய தோட்டம்,
ஹேன்தஸ்ஸ,
கண்டி
தொலைபேசி இல.: 081 228 8667

### சர்வோதய சமோதய சேவா.

பெல்மடுல்ல
இலங்கை போதைப்பொருள் தடுப்புச் சங்கம்
இல.121, கின்ஸி வீதி,
கொழும்பு 08
தொலைபேசி இல.: 011 2686311

## சிறுவரொருவர் சட்டமுரணாக தடுத்து வைக்கப்பட்டிருப்பின்

பொலிஸாரினால், இராணுவத்தினால் விளக்கமறியலில் சட்டமுரணாக சிறுவரொருவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தால், அச்சிறுவரின் உறவினர்கள் அல்லது சட்டத்தரணி ஆட்கொணர்மனு ஆணை விண்ணப்பமொன்றைக் குறித்த அதிகாரிகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும்.

## முறைப்பாடு செய்யும் இடங்கள் - சிறுவர் தொழிலாளர்

- தொழில் திணைக்களம்
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
- சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் திணைக்களம்
- சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் மாகாணத் திணைக்களங்கள்
- பொலிஸ் நிலையங்களின் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பணியகம்

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பற்றிய அறிமுகம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஒரு சுயாதீன ஆணைக்குழுவாகும். இது நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமெனத் தாபிக்கப்பட்டுள்ளது. இவ்வாணைக்குழுவின் தத்துவங்களும் பணிகளும் 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாணைக்குழுவிற்கு உறுப்பினர்களைத் நியமிப்பதற்கான நடைமுறை அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தத்துவங்கள்

தனது செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பின்வருவன உட்பட பரந்த தத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- அடிப்படை உரிமை மீறல்கள் குறித்து புலனாய்வு செய்தலும் விசாரணை மேற்கொள்ளலும்.
- நீதிமன்றத்தின் அனுமதியுடன் அடிப்படை உரிமைகளின் மீறல் தொடர்பான ஏதும் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளில் தலையீடு செய்தல்.
- தடுப்பு நிலையங்களுக்கு கிரமமாகச் செல்வதன் மூலம், தடுப்புக்காவலில் உள்ளவர்களின் நலன்களைக் கண்காணித்தல்.
- மனித உரிமை விடயங்களைப் பற்றி ஆய்வு செய்தலும், மனித உரிமைகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளலும்.
- ஆவணச்சாட்சியங்கள் மற்றும் சாட்சிகளை விசாரணை செய்தல் உட்பட சாட்சியங்களைப் பெறுவதற்காக ஆணைக்குழு முன் தோன்றுமாறு ஆட்களுக்கு அழைப்பாணை விடுத்தல்.

(1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பிரிவு 11)

## பணிகள்

அடிப்படை உரிமை மீறல்களை விசாரணை செய்வதற்கு மேலதிகமாக அனேக செயற்பாடுகளை ஆணைக்குழு கொண்டுள்ளது.

- இலங்கை அரசியலமைப்பால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு இசைவாக எல்லா அரச நடைமுறைகளும் இருத்தலை உறுதிப்படுத்தல்.
- அடிப்படை உரிமைகளுக்கு அமைவாக சட்டவாக்கம் நிருவாக நெறிப்படுத்தல்கள் மற்றும் நடைமுறைகள் ஆக்கப்படுவதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனையளித்தல் மற்றும் உதவிசெய்தல்.
- இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு ஏற்றதாக தேசிய சட்டங்களையும், நிர்வாக நடைமுறைகளையும் எவ்வாறு கொண்டுவருவதென அரசாங்கத்திற்கு விதந்துரைகளைச் செய்தல்.
- சர்வதேச மனித உரிமை பொருத்தனைகளை ஏற்பதுபற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனையளித்தல்.
- நாட்டின் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தல்.

(1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பிரிவு 10)

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

தலைமையகம்

இல. 36, கின்ஸி வீதி, கொழும்பு 08.

தொலைபேசி : 0094 11 2694925, 2673806, 2685339, 2685980, 2685981

தொலை நகல் : 0094 11 2694924, 2696470

மின்னஞ்சல் : ***sechrc@sltnet.lk***

இணையத்தளம் : ***www.hrc-srilanka.org***

| பிராந்திய அலுவலகங்கள் | முகவரிகள் | தொலைபேசி இலக்கங்கள் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| கண்டி | இல.69/3/2 ஒ. பேராதனை வீதி, கண்டி | 081 22 22855 | *hrckandy@sltnet.lk* |
| மாத்தறை | இல.15, காளிதாச வீதி, மாத்தறை | 041 22 23307<br>041 22 28533 | *hrcmatara@sltnet.lk* |
| மட்டக்களப்பு | இல.24, சின்னஉப்போடை, மட்டக்களப்பு | 065 22 24420 | *hrcb@sltnet.lk* |
| அநுராதபுரம் | இல.740, பிரீமன் மாவத்தை, அநுராதபுரம் | 025 22 34801 | *hrcanu@sltnet.lk* |
| திருகோணமலை | இல.227, பிரதான வீதி, திருகோணமலை | 026 22 22607 | *hrct@sltnet.lk* |
| வவுனியா | இல.129, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா | 024 22 21030 | *hrcv@sltnet.lk* |
| பதுளை | இல.3/2எ, சேனாநாயக்க உத்யான மாவத்தை, பதுளை | 055 22 29634 | *badullahrc@sltnet.lk* |
| அம்பாறை | இல.D764/1, பண்டுகாபய மாவத்தை, அம்பாறை | 063 22 22340 | *hrcampara@sltnet.lk* |
| கல்முனை | இல. 54, பிட்டங்கி வீதி, மணல்சேனை, கல்முனை | 067 22 29728 | *hrcka@sltnet.lk* |
| யாழ்ப்பாணம் | இல.1, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் | 021 22 22021 | *rvpk@sltnet.lk* |
| **துணைக் காரியாலயங்கள்** | | | |
| புத்தளம் | கொழும்பு வீதி, புத்தளம் | 032 22 65086 | *hrcpidp@sltnet.lk* |
| மன்னார் | இல.952/1, புதிய வீதி, உப்புக்குளம் | 023 22 32341<br>023 22 32341 | *hrcmidp@sltnet.lk* |

**HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA**
No. 36, Kynsey Road, Colombo 08.
Tel : 2694925, 2673806, 2685980, 2685981, 2685339
Fax : 2694924 E-mail : serchrc@sltnet.lk